# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2022.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*அநுராதபுர மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ உத்திக பிரேமரத்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வியல் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

“இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வியல் நிறுவகம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவது மான அமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத் தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களை யும் இதுவரை சொல்லப்பட்ட கழகத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதா தலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாததாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வியல் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கை யினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை

ஆட்களும், ''இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத் தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன்விருப்பப் படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(i) இலங்கையில் கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியலை ஓர் உயர்தொழிலாகப் பேணி மேம்படுத்தல்;

(ii) கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் உயர்தொழில்சார் அந்தஸ்து, அக்கறைகள், உரிமைகள், தத்துவங்கள், சேமநலன் மற்றும் சிறப்புரிமைகளை மேம்படுத்தி பாதுகாத்தல்;

(iii) இலங்கையில் கட்டிட சேவைகள், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நியமங்களை மேம்படுத்தல்;

(iv) இந்த உயர்தொழிலை நேரடியாக அல்லது நேரடியாக அல்லாது பாதிக்கும் விடயங்கள் பற்றி கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வியலாளர்களின் கருத்துக்களைக் கலந்துரையாடி உறுதிப்படுத்துவதற்கான ஒரு மன்றத்தை அரசாங்கத் துக்கும் அதன் துணை நிறுவனங்களுக்கும் வழங்கு தல்;

(v) பொது அக்கறையான விடயங்களைக் கட்டிட சேவைகள், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய ஆட்களுடன் கலந்துரையாடுதல்;

(vi) கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு உயர்தொழில்சார் நியமங்கள் மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதுடன் அவர்களின் உயர்தொழில்சார் செயற்பாடுகளில் அத்தகைய நியமங்களைப் பேணுவதை உறுதிப்படுத்தல்;

(vii) இலங்கையில் கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான ஈடுபாட்டு கட்டண அளவுத்திட்டம் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயித்தல்;

(viii) ஏனைய நாடுகளில் உள்ள கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் நிறுவனங்களுடன் / சங்கங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்;

(ix) கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் பட்டய நிறுவனம் (CIBSE), ஐக்கிய இராச்சியம் மற்றும் உலகில் உள்ள வேறு ஏதேனும் உயர்தொழில் குழுமங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்;

(x) தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கும் தமது அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் முன்வைக்கும் திறன்களை முன்னேற்றுவதற்கும் நட்புறவை மேம்படுத்துவதற்கும் கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான மன்றம் ஒன்றை உள்நாட்டில் உருவாக்குதல்;

(xi) கட்டிட சேவைகளின் பொதுவான முன்னேற்றத்தை ஒரு விஞ்ஞானமாகவும் ஓர் உயர்தொழிலாகவும் மேம்படுத்துதல்;

(xii) நிறுவனத்தின் உறுப்பினர்களிடையே கட்டிட சேவை விடயம் பற்றிய தகவல்கள் மற்றும் கருத்துக்களைப் பரிமாறுவதற்கு வசதியளித்தல்;

(xiii) உயர்தொழில்சார் கட்டிட சேவைகள் பொறியிய லாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களாகத் தகைமை பெறுவதற்கு விரும்பும் ஆட்களின் அனுமதி, உயர்தொழில் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றை ஆதரவளித்து நடத்துதலும் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துதலும்;

(xiv) நிறுவனத்தின் உறுப்பாண்மைக்குத் தகைமை பெறு வதற்கு கற்கை நெறிகளை விதித்துரைத்தல் அல்லது அங்கீகரித்தல்;

(xv) நிறுவனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளை விதித்துரைத்தல்;

(xvi) கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களாகத் தகைமை பெறு வதற்கு விரும்புவோருக்கான வழிகாட்டல்களை வகுத்தல்;

(xvii) தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உறுப்பினர்களின் உயர்தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தல்;

(xviii) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டல் தெளிவு படுத்தல் மற்றும் உயர்தொழில் சேவைகளைப் பெறுதல்;

(xix) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான நூலகங்கள், நியமங்கள் மற்றும் நடவடிக்கைக் கோவைகள், வெளியீடுகள், மூலப் பிரதிகள், அட்டவணைகள், புகைப்படங்கள் மற்றும் அத்தகைய ஏனைய சாதனங்கள் ஆகியவற்றைத் தாபித்துப் பேணுதல்;

(xx) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான உபகரணங்கள், கருவிகள் மற்றும் சாதனங்களின் நூதனசாலையை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடிப்படையில் தாபித்துப் பேணுதல்;

(xxi) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் சம்பந்தப்பட்ட பொருட்கள், நடவடிக்கைகள், கருவிகள், உபகரணங்கள், சாதனங்களின் கண்காட்சிகளை நடத்தி மேம்படுத்தல்;

(xxii) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியலில் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கு உதவியை ஏற்பாடு செய்தல் அத்துடன்/அல்லது வசதியளித்தல்;

(xxiii) பிரிவு 8 இன் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஆட்களுக்கு உறுப்பாண்மையை வழங்குதல்;

(xxiv) பட்டயக் கட்டிட சேவைகள் பொறியியலாளர்களுக்கான அந்தஸ்தை வழங்கி பதிவேடு ஒன்றைப் பேணுதல்;

(xxv) உறுப்பினர்களுக்கான ஒழுக்கம் பற்றிய பதிவேடு ஒன்றைப் பேணுதல்;

(xxvi) கட்டிட சேவைகளுக்கான நியமங்கள் மற்றும் செயற் பாட்டுக் கோவைகளை தயாரித்தலும் மேம்படுத்தலும்;

(xxvii) கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட் பவியல் தொடர்பான தொழில்நுட்பப் பத்திரங்கள், நாளேடுகள், செய்திமடல்கள், நியமங்கள், நடவடிக்கைக் கோவைகள் மற்றும் ஏனைய சாதனங் களை வெளியிடுதல்;

(xxviii) மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமான, இடைநேர்விளைவான அல்லது உகந்த எல்லா அத்தகைய செயல்களையும் புரிதலும் நடவடிக் கைகளை மேற்கொள்ளுதலும்.

உறுப்பாண்மை

**4**. கட்டிடம் தொடர்பான வடிவமைப்பு, பொருத்துதல், பராமரிப்பு, உற்பத்தி அல்லது உற்பத்திகளை வழங்குதல் போன்ற கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வியலில் ஏதேனும் துறையை மேற்கொள்ளும் ஆட்களுக்கு இலங்கை IBSE&TSL இன் உறுப்பாண்மை திறந்ததாதல் வேண்டும். நிறுவனத்தின் அங்கத்தவர் என்போர் நிறுவன உறுப்புரிமையால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**5**. நிறுவனத்தின் அலுவல்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத் துவம் நிறுவனத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

பேரவை நிறுவனத்தின் ஐந்து கௌரவ உத்தியோகத்தர் களையும் (தலைவர், தெரிவு செய்யப்பட்ட தலைவர், நேர் முந்திய தலைவர், செயலாளர் மற்றும் ஒரு பொருளாளர்) இரண்டு

நட்புறவாளர்களையும் இரண்டு உறுப்பினர்களையும் ஒரு இணை உறுப்பினரையும் ஒரு தகுதிச் சான்றிதழ் பெற்றவருமாக வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆறுவரை யிலான (உத்தியோகத்தரல்லாத) உறுப்பினர்களையும் கொண்டி ருத்தல் வேண்டும்.

தலைவர் நீங்கலாக பதவி வகிக்கும் ஓர் உறுப்பினரின் மரணம் காரணமாக ஒரு வெற்றிடம் ஏற்பட்டால் அவ்வாறு ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பேரவை பொருத்தமான ஓர் உறுப்பினரை நிய மிப்பதற்கான உரிமை பேரவைக்கு இருத்தல் வேண்டும். தலைவர் பதவியைப் பொறுத்தவரை, தெரிவு செய்யப்பட்ட தலைவர் அந்தப் பதவியை வகித்தல் வேண்டும்.

''இலங்கைக் கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனம்'' கூட்டிணைக்கப்படுவதற்கு நேர் முன்னர் இருந்த ''இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பேரவை'' முதலாவது பேரவையாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்**

**6**. (1) நிறுவனத்தின் நோக்கத்துக்காக ஏதேனும் அசையாத அல்லது அசையும் ஆதனத்தை பராதீனப்படுத்துவதற்கு, பாரபந்தப்படுத்துவதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு, குத்தகைக்கு, வாடகைக்கு, அடகுக்கு, பிணையத்துக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், விற்றல் மற்றும் கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு விதமாக கொள்ளல், வைத்திருத்தல்.

(2) நிறுவனத்தினால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகபூர்வ முகவரின் ஊடாக நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளை நேரடியாக அல்லது நேரடியாக அல்லாது மேற்கொள்ளுதல் மற்றும் புரிதல் அல்லது நடைமுறைப்படுத்தல்.

(3) ஏதேனும் வங்கியில் அல்லது கிளையில் அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்தில் அல்லது நிதியங்களில் அதன் நிதிகளை முதலிட்டு நடைமுறை வைப்புகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதல்.

(4) நிறுவனத்தின் நோக்கத்துக்காக நிறுவனம் பொருத்தமானது எனக் கருதக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அத்தகைய பிணையத்தில் முற்பணமிடுதல் அல்லது கடன் கொடுத்தல் மற்றும் கடன்பெறுதல்.

(5) உறுப்பாண்மை, உறுப்பாண்மைக்கான அனுமதி மற்றும் நிறுவனத்தினால் நடத்தப்படும் கற்கை நெறிகள், பரீட்சைகள், கண்காட்சிகள் போன்றவற்றுக்கான அனுமதி தொடர்பாக கட்டணங்கள், சந்தாக்கள் மற்றும் பங்களிப்புகளை அறவிடுதல்.

(6) கட்டிட சேவைகள் பொறியியலாளர்களாக தகைமை பெறுவதற்கு விரும்பும் ஆட்களின் முகாமைத்துவம், பயிற்சி, மாற்றீடு மற்றும் விலகல் அல்லது தகைமையீனத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை விதித்துரைத்தலும் அவற்றை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலும்.

(7) உறுப்பினர் அல்லது சக உறுப்பினரை பட்டய கட்டிட சேவைகள் பொறியியலாளராக செயற்படுவதற்கு அதிகாரமளித்தல்.

(8) அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தல், தொழிலில் அமர்த்துதல், மாற்றீடு செய்தல், விலக்குதல் மற்றும் அவர்களுக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் அவர்களின் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளை விதித்தலும்.

(9) பொதுவாக, நிறுவனத்தின் குறிக்கோள்களை மேற்கொள்வதற்கு அல்லது அடைவதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான அல்லது உகந்த அத்தகைய எல்லா செயல்களையும் விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

(10) கட்டிட சேவைகள் தொடர்பான விடயங்களில் பிணக்கைத் தீர்க்கும் நடுத்தீர்ப்பு மற்றும் நிபுணத்துவ சாட்சி சேவை ஆகியவற்றில் பங்கேற்றல்.

(11) நிறுவனத்தின் நிதிகள், மூலங்கள் மற்றும் ஆதனங்கள் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(12) எவரேனும் விண்ணப்பதாரியை அனுமதித்தல், கண்டித்தல், இடைநிறுத்தல், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுதல், விலக்குதல், விலகுதலை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நிறுவனத்தின் உறுப்பாண்மையுடன் தொடர்புடைய எல்லா விடயங்களையும் நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளுதல்.

**7.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:- கூட்டுத்தாபனத்தின் விதிகள்

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டுவிலகுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள்; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப் படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப்படற் பாலனவுமான கடன்கள்

**8**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் நிதியம்

**9.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்

களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும்பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

*கூட்டுத் தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்*

**12.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*கூட்டுத் தாபனத்தின் இலச்சினை*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக் கப்படலாகாது. அவர்கள் தாம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.